

பெரம்பலூர் மாவட்ட கழக முன்னாள் செயலாளர்– முன்னாள் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் – வேப்பூர் ஒன்றிய கழகச் செயலாளர் – வேப்பூர் ஒன்றிய குழுத் துணைத் தலைவர்– தற்போதைய மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர், குன்னம் சி.இராஜேந்திரன் (72) உடல் நலக்குறைவு காரணமாக மறைந்ததையடுத்து, பெரம்பலூர் மாவட்டம், குன்னத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு,கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதில் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச்செல்லி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன். சம்பத், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் டாக்டர் எஸ்.டி.ஜெயலெட்சுமி உள்ளிட்டோர் உள்ளனர்.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக மருத்துவ அணி துணை அமைப்பாளர் கே.ஜியாவுதீன் குத்தூஸ் ஜெ.சையது ராபியா ஆகியோர் மகள் டாக்டர் நூருல் மர்லியா, ஏ.அபுபக்கர் ஏ.நர்கிஸ்பானு ஆகியோர் மகன் ஏ.அப்துல் ரியாஸ் பி. இ., ஆகியோரின் திருமணம் மற்றும் வரவேற்பு விழா 6.9.2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திருமண விழாவில் முன்னாள் அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளருமான சு.முத்துசாமி, மாவட்ட கழக நிர்வாகிகள் குமார் கே.முருகேஸ், ஆ.செந்தில்குமார், ப.க.பழனிசாமி, பகுதி கழக செயலாளர்கள் அக்னி சந்துரு, பொ.ராமச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், ஆன்றோர், சான்றோர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். விழாவிற்கான ஏற்பாடுகளை ஏ.எஸ்.ஏ.சமது, கே.ஜியாபுதீன் குத்தூஸ், சிராஜ்தீன், சையதுமுஸ்தபா, அப்துல்ரஹ்மான், குத்தூஸ்பாபு, இம்ரான், சாகுல்அமீது, சதாம்உசேன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

### பெரம்பலூர் மண்ணில் திராவிட முன்னேற்றக் கழகத்தின்

# வளர்ச்சிக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் குன்னம் சி.இராஜேந்திரன்!

## மறைவுச் செய்தியறிந்து - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

பெரம்பலூர், செப், 9 -

பெரம்பலூர் மாவட்ட கழக முன்னாள் செயலாளர் முன்னாள் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் வேப்பூர் ஒன்றியக் கழகச் செயலாளர் - வேப்பூர் ஒன்றிய குழுத் துணைத் தலைவர் தற்போதைய மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர், குன்னம் சி. இராஜேந்திரன்(72),உடல் நலக்குறைவு காரணமாக மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

பெரம்பலூர் மாவட்டம், குன்னத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு,கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா.எம்.பி., கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி குடும்பத்தி னருக்கு ஆறுதல் கூறினார்.

இதில் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. ப.பரமேஷ்குமார்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு. அட்சயகோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், ரோவர் கல்வி நிறுவனங்கள் தலைவர் க. வரதராஜன், ஜான் அசோக், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச் செல்லி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் டாக்டர் எஸ். டி. ஜெயலெட்சுமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி. மதியழகன், சி.ராஜேந்திரன்,டாக்டர் செ. வல்லபன், ஒன்றிய கழக பொறுப்பாளர் அழகு. நீலமேகம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ. கார்மேகம், வேப்பூர் ஒன்றியக்கழு முன்னாள் தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட விவசாய கூலித் தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ. எம். கே. கரிகாலன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மா. பிரபாகரன், ஆர். அருண், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் மற்றும் அணி அமைப்பாளர் எம்.மணி வாசகம் உள்ளிட்ட ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

### பெரம்பலூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# குன்னம் சி.ராஜேந்திரன் இறுதி ஊர்வலம்!


## ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி. - கழகத்தினர் அஞ்சலி!

பெரம்பலூர், செப். 9 –

பெரம்பலூர் முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர், பெரம்பலூர் மாவட்ட முன்னாள் ஊராட்சி குழு தலைவர், வேப்பூர் முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர், வேப்பூர் முன்னாள் ஒன்றிய குழு துணைத் தலைவர், தற்போதைய மாநில வர்த்தக அணித் துணைச் செயலாளர் குன்னம் சி. ராஜேந்திரன் (72) உடல் நலம் பாதிக்கப்பட்டு திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (7.9.2026) மதியம் 12.50 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரது உடல் சொந்த ஊரான குன்னத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்று (08.09.2026 – செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணியளவில் குன்னத்தில் நல்அடக்கம் செய்யப்பட்டது.



மறைவு தகவல் அறிந்ததும் ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி. நேரில் சென்று மறைந்த குன்னம் சி.ராஜேந்திரன் உடலுக்கு மலர் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மேலும் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. ப.பரமேஷ்குமார்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு. அட்சயகோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், ரோவர் கல்வி நிறுவனங்கள் தலைவர் க. வரதராஜன், ஜான் அசோக்,

பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச்செல்லி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் டாக்டர் எஸ். டி ஜெயலெட்சுமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன்

ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம். ராஜ்குமார், செ. நல்லதம்பி, தி. மதியழகன், சி.ராஜேந்திரன், டாக்டர் செ. வல்லபன், ஒன்றிய கழக பொறுப்பாளர் அழகு. நீலமேகம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு. தங்கராசு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ. கார்மேகம், வேப்பூர் ஒன்றியக்கழு முன்னாள் தலைவர் பிரபா செல்லப்பிள்ளை,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மா. பிரபாகரன், ஆர். அருண், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் மற்றும் அணி அமைப்பாளர் எம்.மணி வசகம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலரும் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி னர்.

மறைந்த குன்னம் சி. ராஜேந்திரனுக்கு ராம திலகம் என்கிற மனைவியும், செந்தில்நாதன், வெற்றிவேல், ரமேஷ் ராஜேந்திரன் ஆகிய மூன்று மகன்களும் உள்ளனர்.

ரமேஷ் ராஜேந்திரன் என்பவர் தி. மு. க. தகவல் தொழி ல்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளராக உள்ளார்.

### தலைமைக் கழகப் பிரதிநிதிகள் ஜி.வி.மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. - என்.மாலை ராஜா முன்னிலை

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – வழக்கறிஞர் ரெ.மகேஷ் அறிக்கை!

குமரி, செப். 9 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர்-வழக்கறிஞர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (09.09.2026 புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம் தலைமையில், கழக மறுசீரமைப்பு தலைமைக் கழகப் பிரதிநிதிகள் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்.மாலை ராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

ஆகவே, இந்த செயற்குழுக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



பொருள் :

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் வைத்து நடைபெற்ற தலைமைச் செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி, ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் கழகம் மறுசீரமைப்பு பணிகள் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் வடக்கு பகுதி, 158வது வட்டத்தைச் சேர்ந்த பெருமாள் மற்றும் திருமதிகிரிஜாபெருமாள்ஆகியோர்தங்களதுசெயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள்: 08-09-2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

# மாதவரத்தில் பூப்பந்து கிரிக்கெட் போட்டி!

சென்னை, செப். 9 –

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட செங்குன்றம் பேரூர் கழகத்தின் GENZ DMK சார்பில் இருநாள் மாபெரும் பகல் நேர பூப்பந்து கிரிக்கெட் போட்டி எல்.ஆர்.மணிகண்டன் ஏற் பாட்டில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் மற்றும் செங்குன்றம் பேரூர் கழகத்தின் பொறுப்பாளர் ஆர்.டி.சுதாகர் ஆகியோர் இணைந்து போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு கோப்பை மற்றும் பரிசுத் தொகையை வழங்கினர். மேலும் இந்நிகழ்வில் பேரூர் கழக துணை செயலாளர் கே.கபிலன், அன்பு, மதிவாணன், அறிவுநிதி, அப்துல்சமத், இளைஞர் அணி அமைப்பாளர்கள் கே.எல்.என்.லெனின்குமார், புழல் செ.யுவராஜ், மணலி எஸ். ஸ்டாலின், துணை அமைப்பாளர்கள் சாம்கார்த்தி, கருப்பு (எ) ஸ்ரீதர், கிருஷ்ணமூர்த்தி, ரவிந்திரன், ரெட்ஹில்ஸ் எம்.எஸ்.மணிகண்டன், காவை சாந்தகுமார், ம.குறளரசன், ஆர்.ரூபேஷ், வார்டு அமைப்பாளர்கள் மேலும் இந்நிகழ்வில் இளைஞர் அணி தோழர்கள் என அனைவரும் பங்கேற்று சிறப்பித்தனர்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் ஏ. கே..சுந்தரமூர்த்தி தலைமையிலும், தலைமை கழக மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன் மற்றும் தலைமைக் கழக தணிக்கைகுழு உறுப்பினர் வழக்கறிஞர் ஏ.சரவணன் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் மற்றும் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்தநாள் அண்ணா அறிவாலயத்தில் முப்பெரும் விழா தலைமைக் கழக மறுசீரமைப்பு குறித்தும் சிறப்பாக கொண்டாட வேண்டுமென கேட்டு கொண்டார். இதில் மாவட்ட நிர்வாகிகள் துரை மஸ்தான் குமுதா குமார் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. எல்.ஈஸ்வரப்பன் ஒன்றிய,நகர, பேரூர் செயலாளர்கள் தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர். மாவட்ட துணை செயலாளர் மு.சிவானந்தம் நன்றி கூறினார்.

### வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் காட்பாடி – கே.வி.குப்பம்

# சட்டமன்றத் தொகுதி நிர்வாக வாரியாக மறு சீராய்வு கலந்தாய்வுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. அறிவிப்பு!



கழக தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்களின் ஆணைக்கிணங்க கழக பொதுச் செயலாளர் **துரைமுருகன்** அவர்களின் வழிகாட்டுதலின்படி தலைமைக் கழக பிரதிநிதிகள் **இ.கருணாநிதி**, **ப.தாயகம் கவி** ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி வேலூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டம், கிளை மறுசீராய்வு கலந்தாய்வுக் கூட்டம் பின்வரும் அட்டவணைப்படி நடைபெறும்.

**காட்பாடி சட்டமன்ற தொகுதி**

| வ.எ | நாள் | நேரம் | ஒன்றிய கழகம் மற்றும் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | 10-09-2026 வியாழன் | மாலை 5.00 | காட்பாடி கிழக்கு ஒன்றியம் எஸ்.சரவணன் | கருப்பட்டி காபி அருகில், பிரம்மபுரம் |
| 2 | 10-09-2026 வியாழன் | மாலை 4.00 | காட்பாடி தெற்கு ஒன்றியம் கா.கருணாகரன் | ஒன்றிய திமுக அலுவலகம், சின்ன மிட்டூர் |
| 3 | 10-09-2026 வியாழன் | மாலை 5.00 | காட்பாடி மேற்கு ஒன்றியம் எஸ்.தணிகாசலம் | ஒன்றிய திமுக அலுவலகம் ஆரிமுத்துமோட்டூர். |
| 4 | 10-09-2026 வியாழன் | காலை 11.00 | காட்பாடி வடக்கு ஒன்றியம் சி.இரவி | முருகன் திருமண மண்டபம், பொன்னை. |
| 5 | 13-09-2026 ஞாயிறு | காலை 10.00 | வாலாஜா மேற்கு ஒன்றியம் ஏ.கே.முருகன் | ஒன்றிய திமுக அலுவலகம், அக்ராவரம் |
| 6 | 11-09-2026 வெள்ளி | மாலை 5.00 | காட்பாடி வடக்கு பகுதி ஜி.வன்னியராஜா | நாராயணா நாடார் மண்டபம், சித்தூர் பேருந்து நிலையம். |
| 7 | 10-09-2026 வியாழன் | மாலை 5.00 | காட்பாடி தெற்கு பகுதி எம்.சுனில்குமார் | ஆதிலட்சுமி திருமண மண்டபம், காந்திநகர் |
| 8 | 10-09-2026 வியாழன் | மாலை 5.00 | காந்திநகர் பகுதி என்.பரமசிவம் | எஸ்.ஏ.மகால், காந்திநகர். |
| 9 | 10-09-2026 வியாழன் | மாலை 5.00 | சேண்பாக்கம் பகுதி எம்.முருகப்பெருமாள் | செல்வ விநாயகர் மண்டபம், சேண்பாக்கம் |
| 10 | 11-09-2026 வெள்ளி | மாலை 6.00 | திருவலம் பேரூர் கே.நேரு | எம்.எஸ்.மகால், திருவலம் |

**கே.வி.குப்பம் சட்டமன்ற தொகுதி**

| வ.எ | நாள் | நேரம் | ஒன்றிய கழகம் மற்றும் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | 09-09-2026 புதன் | மாலை 4.00 | குடியாத்தம் வடக்கு ஒன்றியம் என்.சத்தியானந்தம் | ஆர்.ஜி.டி. மகால், காந்திநகர். |
| 2 | 09-09-2026 புதன் | மாலை 4.00 | குடியாத்தம் கிழக்கு ஒன்றியம் வி.பிரதீஷ் | வி.ஆர்.எம்.மண்டபம், நத்தம் |
| 3 | 09-09-2026 புதன் | மாலை 5.00 | குடியாத்தம் தெற்கு ஒன்றியம் அ.அன்பரசன் | ஒன்றிய அவைத்தலைவர் இல்லம் சிங்கள்பாடி. |
| 4 | 09-09-2026 புதன் | மாலை 5.00 | கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் கே.சீதாராமன் | ஒன்றிய திமுக அலுவலகம், சென்னாங்குப்பம். |
| 5 | 09-09-2026 புதன் | மாலை 4.00 | கே.வி.குப்பம் மத்திய ஒன்றியம் ஆர்.முருகேசன் | எஸ்.ஆர்.எம்.மகால், இலத்தேரி |

மேற்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் மறுசீராய்வு கலந்தாய்வுக் கூட்டங்களில் அந்தந்த நிர்வாகங்களுக்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட கழக, கிளை கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள். கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தங்களின் ஆலோசனைகளை வழங்கிட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**முனைவர்**
**டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி.**
மாவட்ட பொறுப்பாளர்,
வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க.